சென்ட் நிலம் தவிர மற்ற நிலங்கள் அனைத்தும் ரெவின்யூ புறம்போக்கு என்று வருவாய்த்துறை பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயில் தொடர்பாக நிலப்பதிவேடு திருவிதாங்கூர் அரசின் தனி வட்டாட்சியரால் தயார் செய்யப்பட்டபோது மேற்படி சர்வே எண் 770/1-ல் உள்ள நிலங்கள் மருந்துவாழ் மலை திருக்கோயிலின் தடையற்ற அனுபோகத்தில் இருப்பதாக பரிந்துரை செய்துள்ளார்கள். ஆனால் 1-11-1956-க்குப் பிறகு மறு நில அளவீடு செய்யப்பட்டபோது, மேற்படி நிலம் தொடர்பாக அதற்கு முன்பிருந்த பதிவேடுகளைக் கருத்தில் கொள்ளாமல் வருவாய்த் துறை பதிவேட்டில் சர்வே எண் 770/1-ல் உள்ள 626.01 ஏக்கர் நிலத்தில் திருக்கோயில் அமைந்துள்ள 3 சென்ட் நிலம் தவிர்த்து ஏனைய நிலங்கள் ரெவின்யூ புறம்போக்கு என தவறுதலாகக் குறிப்பிடப்பட்டு உள்ளதால், மிகுந்த விலைமதிப்புள்ள அந்த நிலங்களைத் திருக்கோயில் இழக்க வேண்டியதாயிற்று. இந்த நிலையில் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான சர்வே எண் 770-ல் உள்ள 626.01 ஏக்கர் நிலத்தை திருக்கோயில் பெயரில் தேவஸ்வம் புறம்போக்காகத் திருத்தம் செய்ய வேண்டி, உதவி நிலவரித் திட்ட அலுவலருக்கு அறிக்கை அனுப்பியதன் பேரில் நிலவரித்திட்டம் அமல் செய்யப்பட்டு அனைத்து ஆவணங்களும் வருவாய்த்துறை வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தார்கள். அதன்பேரில் சுசீந்தரம் துணை ஆணையாளர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு 9-1-94 மற்றும் 5-2-94-ல் மேற்படி சர்வே எண் 770-ல் உள்ள 626.01 ஏக்கர் நிலத்தை தேவஸ்வம் புறம்போக்காக மாற்றியமைக்க உத்தரவு பிறப்பிக்குமாறு விண்ணப்பித்து உள்ளார்கள். துணை ஆணையாளர் அறிக்கையின்பேரில் இப்பொருள் தொடர்பாக இந்துசமய அறநிலையத்துறை ஆணையாளர் அவர்களும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணை பிறப்பிக்கக் கேட்டுக்கொண்டுள்ளார்.

முற்பகல் 11-25

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவிலுக்குச் சொந்தமான இதுபோன்ற நிலங்களை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்துசமய அறநிலையத்துறை அமைச்சரிடமிருந்து வருவாய்த்துறை அமைச்சருக்கு ஒரு விண்ணப்பம் வந்திருக்கிறது. வருவாய்த்துறை அமைச்சர் அதைப் பரிவோடு கவனிக்கலாம்.